# SG Digital

## UOB Mighty பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

UOB Mighty செயலி, UOB வாடிக்கையாளர்களுக்கு அனைத்து சேவைகளையும் வழங்கும் கைப்பேசி வங்கிச்சேவை செயலியாகும். இந்தச் செயலியுடன் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வங்கிக் கணக்கு விவரங்களைப் பார்வையிடலாம். அதோடு, QR கட்டணமுறைகளின் வழியாக ரொக்கமில்லாத பரிவர்த்தனைகளும் செய்யலாம்

## படிநிலை 1 — உங்கள் கைப்பேசியில் UOB Mighty செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **UOB Mighty Singapore** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், ‘**Get**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், ‘**Install**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 — UOB இணைய வங்கிச்சேவைக்குப் பதிவு செய்யுங்கள்



3. செயலியைச் செயற்படுத்தி, ‘**Sign Up**’ தேர்ந்தெடுங்கள்.



4. திரையில் காட்டப்படும் படிநிலைகளைப் பின்பற்றி, UOB இணைய வங்கிச் சேவைக்குப் பதிவு செய்யுங்கள்.



5. பதிவின்போது உங்களுக்குக் குறுந்தகவலில் அனுப்பி வைக்கப்படும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லை (OTP) உள்ளிடுங்கள்.



6. உங்கள் பதிவைப் பூர்த்தி செய்ய ஏடிஎம் /கடன்பற்று அட்டை / ரொக்கக்கழிவு அட்டை எண்ணையும் PIN எண்ணையும் உள்ளிடுங்கள்.

**குறிப்பு**: சரிபார்ப்புக்கு உங்களது UOB அட்டை எண்ணும் PIN எண்ணும் தேவைப்படும்.

## படிநிலை 3 — UOB Mighty செயலியுடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்



7. உங்களது UOB Mighty செயலியைச் செயற்படுத்தி புகுபதிவு செய்யுங்கள்.



8. செயலியில் உள்ள QR குறியீடு வருடியைப் பயன்படுத்தி SGQR குறியீட்டை வருட “QR PAY” மீது தட்டுங்கள்.



9. வணிகர் காட்சிக்கு வைத்திருக்கும் SGQR குறியீட்டை வருடி, வணிகரின் பெயரைச் சரிபாருங்கள்.



10. பரிவர்த்தனை தொகையை உள்ளிட்டு, வணிகரின் பெயரை உறுதிப்படுத்திய பிறகு பணம் செலுத்துங்கள்.

நீங்கள் செலுத்தும் பணம் உங்கள் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு, வணிகரின் கணக்கில் நேரடியாகச் சேர்க்கப்படும்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர் )*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயிலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY